நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

<u>சி.சி. 44/2015</u>

2018ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 03ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 7வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. பூபதி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: திருமதி. லதா வயது:

த/பெ.(அ)க.பெ: சேட்டு தொழில்:காவல் ஆய்வாளர்

ஊர் : திருப்ப்த்தூர் சமயம்: இந்து

வட்டம் : திருப்ப்த்தூர் சாதி:

மாவட்டம் : வேலூர்

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது வாணியம்பாடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.10.2014 ந் தேதி திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது பகல் 13.00 மணிக்கு வாதி சக்தி கொடுத்த புகார் மனுவை பெற்று காவல்நிலைய குற்ற எண் 19/2014 இதச பிரிவுகள் 498(எ), 506(1) மற்றும் பிரிவு 4 டி.பி. அக்ட் படி ஐபிசியாக வழக்கு பதிவு செய்து கொண்டேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 3 ஆகும். இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே காலை 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சீனிவாசன், சின்னராஜ் இவர்கள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்து கொண்டேன். அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ 4 ஆகும். மாதிரிவரைபடம் அ.த.சா.ஆ 5 ஆகும். சாட்சிகள் சக்தி, சின்னதாய், மல்லிகா, சுப்பிரமணி, அருண், முத்தையா ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துக்கொண்டேன். எதிரியை அன்றே மாலை 16.00 மணிக்கு கொரட்டி பஸ் ஸ்டாப்பிடம் 1ம எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிக் கொண்டேன். 14.10.2014ந் தேதி வேலூர் மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் அவர்களுக்கு வரதட்சணை கொடுமை சம்மந்தமாக முகாந்திரம் உள்ளதா என விசாரித்து அறிக்கை வழங்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தும் 04.03.2015ந் தேதி வேலூர் மாவட்டம சமூக நலத்துறை அலுவலத்திலிருந்து அறிக்கை பெற்று மேற்படி அலுவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சமூக நலத்துறை விசாரணையின் அடிப்படையில் வரதட்சணை கொடுமை இல்லை என அவர் வழங்கிய அறிக்கையும பெற்றுக் கொண்டேன். மேற்படி அறிக்கை அ.த.சா.ஆ 6 ஆகும். மேற்படி

அறிக்கையின் அடிப்படையில் எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 498(எ), 506(1) ஐபிசியாக பிரிவு மாற்றம் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து கொண்டேன்.
எ.த.கு.வி:- இல்லை.